பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:48 | 10.01.2024 புதன்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

## மட்டக்களப்பில் 2319 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

மாவட்டத்தில் வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை தொடராக பெய்து வருவதனால் கடந்த 48 மணித்தியாலங்களில் மாவட்டத்திலுள்ள குளங்கள், ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்ததுடன், மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ளநீர் புகுந்துள்ளது. கிரான் புலி பாய்ந்த கல் மற்றும் கின்னயடி பிரம்படித்தீவு, ஈரலகுளம், மயிலவட்டுவான், வாகரை கல்லரிப்பு பகுதிகளுக்குச் செல்லும் பாதை முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் படகு சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

மாவட்டத்தின் கோரளைப்பற்று வடக்கு வாகரையில் 393 குடும்பங்கள், மண்முனை வடக்கு பகுதியில் 33 குடும்பங்கள், களுவாஞ்சிக்குடி பகுதியில் 7 குடும்பங்கள், மண்முனைத் தென்மேற்கு பட்டிப்பளை பகுதியில் 10 குடும்பங்கள், போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலக பகுதியில் 290 குடும்பங்கள், உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் தங்க வைத்துள்ளனர்.

காத்தான்குடியில் 1498 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு 7 குடும்பங்கள் காத்தாங்குடி பதுரியா வித்தியாலயத்திலும், ஏறாவூர் பற்று செங்கலடி பகுதியில் 88 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு 27 குடும்பங்கள் ஏறாவூர் - 4 கோயில் மண்டபத்தில் தங்கவைத்துள்ளனர்.

வவுணதீவு மண்முனை மேற்கு பகுதியில் படகில் மீன் பிடிக்கச் சென்ற ஒருவர் காணாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதேசங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்ததுடன், பெரும்பாலான வீதிகளும் வெள்ள நீரால் நிறைந்துள்ளதுடன், பிரதான கால்வாய்கள், ஆறுகள், மற்றும் தாழ்நில பிரதேசங்களிலுள்ள மற்றும் போக்குவரத்தில் ஈடுபடும் பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

# இலங்கையில் பிரித்தானிய இளவரசி

விசேட விமானத்தில் இலங்கை வந்த பிரித்தானிய இளவரசி ஹேனினை விமான நிலைய அதிகாரிகள் வரவேற்றனர். பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான 75 வருட இராஜதந்திர உறவுகளை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்வுகளின் ஒரு பகுதியாக பிரித்தானிய இளவரசி ஹேன் இன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

மூன்று நாள் விஜயமாக இலங்கைக்கு வந்த பிரித்தானிய இளவரசி ஹேனின் கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கும் செல்லவுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட அரசியல் தலைவர்களையும் அவர் சந்திக்கவுள்ளார்.





## வடக்கு வலிகாமத்தில் காணிகள் விடுவிப்பு

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வலிகாமம் வடக்கில் வறுத்தலைவிளான் பகுதியில் உள்ள 23 காணிகளை விடுவிக்கவுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத்திற்கு இராணுவம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் சுமார் 3,000 ஏக்கர் காணி முப்படைகளின் வசம் உள்ள நிலையில், அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையிலேயே குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் 3400 ஆண்டு பழமையான நாக மனித எச்சங்கள்

யாழ்ப்பாணம் வேலணையில் 3400 ஆண்டு பழமையான நாக மனித எச்சங்கள் நெதர்லாந்து மற்றும் இலங்கை ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

யாழ் குடாநாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட தொன்மையான மனித எச்சங்களில் இதுவும் ஒன்றாக நோக்க வேண்டியுள்ளதாக வட இலங்கையை பொருத்தமட்டில் பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் பொ.இரகுபதி, பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா போன்றோர்களால் மேற்கொண்ட ஆய்வுகளில் இத்தகைய பண்பாடு பற்றி கூறப்பட்டு வந்தது.

இந்நிலையில் அதற்கு வலுச்சேர்க்கும் முகமாகவே தற்போது இத்தொல்லியல் எச்சங்கள் கிடைக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும். எனினும் இவை நுண்கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பெருங்கற்கால பண்பாட்டிற்குரியதாகப் பார்க்கப்படுகிறது.



குறிப்பாக நாகர் வழிவந்த மக்கள் பெருங்கற்கால மக்களே ஆவர், இத்தொல்லியல் மையம் வேலணை தீவின் சுற்றுலாத் தலமான கடற்கரையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தெற்கே அமைந்துள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேவேளை இவ் அகழ்வாய்வில் விலங்குகளின் எச்சங்கள் கருவிகள் மற்றும் இறந்த உடல்கள் புதைக்கப்பட்டதற்கான சான்றுகள் மற்றும் தொல்பொருள் சின்னங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

இந்த அகழ்வாய்வினை இலங்கை ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவத்துறையின் மூத்த விரிவுரையாளர் திலங்க சிறிவர்தன அவர்களுடன் இணைந்து இந்திகா ஜெயசேகர, ஜனினா நோனிஸ் அத்துடன் தொல்லியல் மற்றும் பாரம்பரிய கற்கைகள் நிறுவகத்தின் நதீரா திஸாநாயக்க மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தொல்லியல்துறை மாணவர்களான டக்சினி, கனுஸ்டன், சுசாந்தி ஆகியோர் இவ் ஆராய்ச்சியை மேற்கொண்டனர்.



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# குவைத் வீட்டுப்பணியாளருக்கு கட்டுப்பாடு

**இலங்கை வீட்டுப்பணியாளர்களை வெளிநாடுகளுக்கு ஆட்சேர்ப்பு செய்து அனுப்பும் இலங்கையின் மனிதவள மேம்பாட்டு நிறுவனங்கள் குவைத்துக்கு தொழிலாளர்களை அனுப்புவதை நிறுத்திவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை உதவியாளர்களை குவைத்துக்கு அழைத்து வருவதற்கான நிபந்தனைகள் மற்றும் விதிகளை உள்ளடக்கிய, குவைத்துடனான தொழிலாளர் ஒப்பந்தத்திற்காக இலங்கை காத்திருப்பதால், இந்த விவகாரத்தில் புதிய முடிவு எதிர்பார்க்கப்படுவதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஒவ்வொரு தொழிலாளிக்கும் தகுதியான விடுமுறையை வழங்குவதுடன், வீட்டுப் பணிப்பெண்களின் சம்பளத்தை மறுபரிசீலனை செய்து அவர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்று இலங்கை விரும்புகிறது. வீட்டு உதவி அலுவலகங்கள் கே-நெட்டைப் பயன்படுத்தி கட்டணம் வசூலிப்பது தொடர்பான அமைச்சரவை முடிவை அமுல்படுத்திய முதல் நாளில், ஆறு விதிமீறல்கள் பதிவு செய்யப்பட்டன. அலுவலகங்கள் ஆறு மாதங்களாக நிறுத்தப்பட்டன. வர்த்தக அமைச்சகத்தின் புழக்கத்தை மீறி கே-நெட் இயந்திரங்கள் இல்லாத 35 வீட்டு உதவி அலுவலகங்களையும் ஆய்வுக் குழு கண்டுபிடித்தது. இந்த அலுவலகங்கள் இடைநிறுத்தப்பட்டு விசாரணை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன. மனிதவளத்தின் பொது ஆணையம், வசதியின் உரிமத்தில் பதிவுசெய்யப்பட்ட உதவியாளர்களுக்கு அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த விண்ணப்பமான "மை ஐடி" மூலம் "ஸ்மார்ட் வொர்க்கர் ஐடென்டி பிகேஷன்" வழங்க உறுதியளிக்குமாறு வீட்டுப் பணியாளர்களின் அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களை கேட்டுக் கொண்டது. பெப்ரவரி 2023 இல் தொடங்கப்பட்ட ஐடி, குவைத் குடும்பம், வேலை செய்ய அனுமதிக்கும் முன் உதவியாளர்களின் விபரங்களைச் சரிபார்த்து, தளர்வான உழைப்பு மற்றும் வணிக மோசடிகளைத் தடுக்க உதவுகிறது. தொழிலாளர்கள் அலுவலகங்களுக்குச் செல்லும்போது அவர்களின் ஸ்மார்ட் ஐடியைச் சரிபார்த்து, ஒப்பந்தங்கள் மற்றும் ரிசீட்டுகளை ஒப்பிட்டுப் பார்த்து, அவர்கள் கையாளப்படும் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்துமாறு குடிமக்களை மனிதவளம் வலியுறுத்தியது.**

**குவைத்தில் வீட்டுப்பணிக்குச் சென்ற பல பெண்கள் கடந்த காலங்களில் அவல நிலையில் நாடு திரும்பியுள்ளனர். கொடுமை, சித்திரவதை, சம்பளம் வழங்காமை போன்ற காரணங்களினால் எதிர்காலக் கனவுகளுடன் சென்ற பெண்கள் கண்ணீருடன் நாடு திரும்பினர். சட்ட விரோதமாகக் குவைத்தில் தங்கி இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் நாடு கடத்தப்பட்டனர். பாஸ்போட் விஸா மோசடிகளாலும் பல் பெண்கள் நாடுதிரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. வெளிநாடுகளில் பணிக்குச் சென்று ஏமாற்றப்பட்டவர்கள் மீண்டும் இலங்கைக்குத் திரும்புவதற்கு அவர்களிடம் எவ்வித பணமும் இருப்பதில்லை வெளிநாட்டுப் பணியகம் அவர்களுக்கான விமான பயணச் சீட்டுகளைக் கொடுத்து பாதிக்கப்பட்டவர்களை நாட்டுக்கு அழைத்து வருகிறது.**

**இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண் வேலைக்குச் செல்லும் பெண்கள் கருத்தரித்த நிலையிலும் குழந்தையுடனும் நாடு திரும்புவது அதிகரித்து வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு வாரியம் கூறுகின்றது. கடந்த இரு வருட காலப்பகுதியில், கருவுற்ற நிலையிலும் குழந்தையுடனும் சுமார் 300 பெண்கள் வரை நாட்டிற்கு அழைத்து வரப்பட்டிருந்தாலும் சட்டப் பிரச்சினை காரணமாக அழைத்து வர முடியாதவர்களும் அதிகம் இருப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு வாரியத்தின் துணை பொதுமுகாமையாளர் மங்கள ரன்தெனிய கூறுகின்றார்.**

**போலி முகவர்களுக்கு கடூழியத் தண்டனை கொடுத்தால் மோசடிகள் நடைபெறுவதைத் தடுக்கலாம் குவைத்தில் பணிபுரியும்போது பலபெண்கள் மரணமானார்கள். அவர்கள் மரணமானதற்கான உண்மையான காரணங்கள் எவையும் இதுவரை வெளிப்படையாகத் தெரியவரவில்லை. குவைத்தில் பணிபுரிந்த பெண்மரணம் என்ற ஒற்றை வரிச்செய்தியுடன் கடந்து போய்விடுகிறோம். இதனை அரசாங்கம் மிகக் கவனமாக ஆராய வேண்டும்**

# சீனாவுக்காக உளவு பார்த்த அமெரிக்க அதிகாரி

உளவுத்துறை அதிகாரிக்கு முக்கியமான இராணுவத் தகவல்களை வழங்கிய குற்றத்தை ஒப்புக்கொண்ட அமெரிக்க கடற்



படை குட்டி அதிகாரிக்கு திங்களன்று இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக அமெரிக்க நீதித்துறை தெரிவித்துள்ளது.

26 வயதான வென்ஹெங் ஜாவோ மற்றும் மற்றொரு அமெரிக்க மாலுமி ஜின்சாவோ வெய் ஆகியோர் சீனாவுக்காக உளவு பார்த்ததாக சந்தேகத்தின் பேரில் ஆகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டனர்.

ஒக்ரோபரில் கலிபோர்னியாவில் உள்ள பெடரல் நீதிமன்றத்தில் வெளிநாட்டு உளவுத்துறை அதிகாரி ஒருவருடன் சதி செய்து இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் ஜாவோ குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

திங்களன்று அவருக்கு 27 மாதங்கள் சிறைத்தண்டனையும் $5,500 அபராதமும் விதிக்கப்பட்டது.

# நேபாள இளைஞர்களுக்கு தடை



நேபாள இளைஞர்கள் வேலைக்காக ரஷ்யா அல்லது உக்ரைனுக்கு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. 10 இளைஞர்கள் கொல்லப்பட்டனர் பலர் காணாமல் போனதாகக் கூறப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2022 இல் உக்ரைன் மீதான முழு அளவிலான படையெடுப்பிலிருந்து 200 க்கும் மேற்பட்ட நேபாள வீரர்கள் ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்பட்டதாக நம்பப்படுகிறது. நேபாள வெளியுறவு அமைச்சகம் கூறியது, அவர்களில் 100 க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். உக்ரேனிய இராணுவத்தில் குறைந்த எண்ணிக்கையிலானோர் சண்டையிடுவதாக நம்பப்படுகிறது.

# இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானில் செயல்பட்டவர் கொலை

முல்லா மசூத் ரஹ்மான் உஸ்மானி கடந்த வெள்ளிக்கிழமை இஸ்லாமாபாத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள கவுரி நகரில் இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் மசூத் ரஹ்மான் உஸ்மானியை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பியோடினர். இத்தாக்குதலில் உஸ்மானி உயிரிழந்தார். அவரது ஓட்டுநர் படுகாயமடைந்தார்.

உஸ்மானி இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து கருத்துத் தெரிவித்து வந்தவர். சிபா - இ சஹாபா இயக்கம் வன்முறை செயல்களில் ஈடுபட்டு வந்த நிலையில், பாகிஸ்தான் அரசு அந்த இயக்கத்துக்கு தடை விதித்தது.

இதைத் தொடர்ந்து சன்னி உலமா சபை உருவாக்கப்பட்டது. இந்தச் சபையின் துணை செயலராக உஸ்மானி பொறுப்பு வகித்து வந்தார்.

# ஹமாஸின் இராணுவக் கட்டமைப்பு தகர்ப்பு

வடக்கு காஸா பகுதியில் உள்ள ஹமாஸின் இராணுவக் கட்டமைப்பு தகர்க்கப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் சனிக்கிழமையன்று அறிவித்துள்ளது.



செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி, மத்திய மற்றும் தெற்கு காஸாவில் உள்ள பாலஸ்தீன பயங்கரவாதக் குழுவை அகற்றுவதில் கவனம் செலுத்தி வருவதாகவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

'இதுவரை நடந்த சண்டையிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் நாங்கள் (இஸ்ரேல்) இதை வித்தியாசமாகவும் முழுமையாகவும் செய்வோம்' என்று அவர் ஒப்புக் கொண்டார்.

மேலும், ஜபாலியா பகுதியில் உள்ள ஹமாஸின் பட்டாலியன் தளபதி, துணைப்படைத் தளபதிகள் மற்றும் 11 நிறுவனத் தளபதிகளை இஸ்ரேல் அகற்றியது என்று இராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி தெரிவித்துள்ளார்.

# சைபர் தாக்குதலால் மாலைதீவு அரசு இணையத்தளங்கள் முடங்கின

மாலைதீவு அரசு இணையத்தளங்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது. மாலைதீவு வெளியுறவுத்துறை, சுற்றுலாத் துறை இணையத்தளங்கள் முழுமையாக முடங்கின.

மாலைதீவுஅரசின் பெரும்பாலான இணையத்தளங்கள் ஹேக் செய்யப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இது தொடர்பாக மாலைதீவு அரசு தரப்பில் அதிகாரபூர்வமாக எவ்வித தகவலும் வெளியிடப்படவில்லை.

# ஓய்வூதியர்களுக்கு நிதி ஒதுக்கீடு



ஓய்வூதிய கொடுப்பனவைச் செலுத்துவதற்கு தேவையான பணம், நிதி அமைச்சிடம் இருந்து கிடைத்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன இன்று (10) பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

“ஓய்வூதிய உதவித் தொகை வழங்குவதில் நாங்கள் நிதி நெருக்கடியை எதிர்கொண்டோம், இது பல ஆண்டுகளாக தாமதமாகி வருகிறது. நெருக்கடியைத் தணிக்க நிதி அமைச்சு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கும் இடையே இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடல்களால், முறையாக பணிகளைத் தொடங்க முடிந்தது. அதன்படி, 2023 டிசம்பர் மாதத்திற்கான பணத்தை நிதி அமைச்சு ஒதுக்கியது, ஓய்வூதியதாரர்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்” என்றார்.

# பொலன்நறுவை - மட்டக்களப்பு வீதி மூடப்பட்டது

பொலன்நறுவை - மட்டக்களப்பு வீதியின் குறுக்கே கல்லெல்ல பாலத்திற்கு அருகில் சுமார் ஒரு அடி நீர்மட்டம் காணப்படுவதாகவும், அதனை கருத்திற்கொண்டு மறு அறிவித்தல் வரை கல்லெல்லப் பகுதியிலிருந்து வீதி மூடப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

தொடர் மழை காரணமாக மகாவலி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மாணிக்க கங்கை நிரம்பி வழிவதால், யால பூங்காவின் திஸ்ஸ மஹாராம, பலட்டுபான பிரதான நுழைவாயிலை மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 06 சுற்றுலா பங்களாக்களும் மூடப்பட்டுள்ளதாக பூங்காவின் பொறுப்பாளர் மனோஜ் வித்யாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# கடல் அட்டைகளைக் கடத்திய ஆறு பேர் கைது



வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினரால் உச்சமுனை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 2,032 கிலோகிராம் கடல் அட்டைகள் கைப்பற்றப்பட்டன. 71 உரப்பைகளில் 2,032 கிலோகிராம் கடல் அட்டைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இந்தக் கடல் அட்டைகளைக் கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட மூன்று டிங்கி இயந்திர படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், அதில் பயணம் செய்த ஆறு பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# யால பிரதான நுழைவாயில் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது




கடும் மழை காரணமாக சில வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியதால் யால பூங்காவின் பிரதான நுழைவாயில் மூடப்பட்டுள்ளது. கடகமுவ நுழைவாயிலிருந்து சுற்றுலாப் பயணிகள் யால பூங்காவிற்குள் பிரவேசிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கடும் மழை காரணமாக மெனிக் கங்கை நிரம்பி வழிவதால் 6 சுற்றுலா விடுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாக யால பூங்காவின் பராமரிப்பாளர் தெரிவித்தார்.

# பிரவுன் சீனியின் விலை அதிகரிப்பு



வட் வரி 18 வீதத்தால் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக நேற்று (09) சந்தையில் ஒரு கிலோகிராம் பிரவுன் சீனியின் விலை 415 ரூபாவாக அதிகரித்துள்ளது.

பெல்வத்த மற்றும் செவனகல சீனி தொழிற்சாலைகளில் மாத்திரமே பிரவுன் சீனி உற்பத்தி செய்யப்படுவதாகவும் நேற்று (09) நடைபெற்ற டெண்டரின் பின்னர் ஒரு கிலோகிராம் சீனி 322 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் சீனி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.இதன்படி பதினெட்டு வீதம் (18%) வட் வரியும் 2.6% சமூக பாதுகாப்பு வரியும் சேர்த்து ஒரு கிலோகிராம் சீனியின் விலை 390 ரூபாவைத் தாண்டியுள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர். அதனுடன் தமது இலாபத்தையும் சேர்த்த பின்னர் ஒரு கிலோ பிரவுன் சீனி 415 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல்




நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் இன்று (10.01.2024) காலை 9.30 மணிக்கு உணர்வுபூர்வமாக இடம்பெற்றிருந்தது.

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக ஆராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

# சுற்றுலாப் பயணிகளின் தொகை அதிகரிப்பு

ஜனவரி முதல் வாரத்தில் 45,000க்கும் மேற்பட்ட சர்வதேசப் பார்வையாளர்கள் தீவு நாட்டிற்குள் பிரவேசித்ததன் மூலம் இலங்கைச் சுற்றுலா 2024 ஆம் ஆண்டு தொடங்கியது.



இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தற்காலிகத் தரவுகள் ஜனவரி 1 முதல் 7 வரை, இலங்கை மொத்தம் 45,303 சுற்றுலாப் பயணிகளை வரவேற்றுள்ளது. முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும் போது, சுற்றுலாப் பயணிகளின் வருகை 117 சதவீதம் அதிகரித்துள்ளது. ஜனவரி 2023 முதல் வாரத்தில், தீவு நாடு 20,875 சர்வதேசப் பார்வையாளர்கள் நாட்டிற்குள் நுழைந்ததைக் கண்டது.

அதன்படி, தினசரி வருகை சராசரி தற்போது 6,471 ஆக உள்ளது. 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில், தினசரி வருகை சராசரியாக 2,982 ஆக இருந்தது.

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் சுசில் பிரேமஜயந்த

தேசிய மற்றும் மாகாண மட்ட பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 36 ஆயிரத்து 385 பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். அத்துடன் 14,385 மாகாண மட்ட ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பிலும் மேலும் 21,000 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பது தொடர்பிலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணைகள், இவ்வாரத்தில் இடம்பெற்று அதற்கான தீர்ப்பு கிடைத்ததும் உடனடியாகவே அந்த நியமனங்களை வழங்குவது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ரோஹிணி குமாரி விஜேரத்ன எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே தெரிவித்துள்ளார்.

# ஹங்கேரிய ஜிம்னாஸ்டிக் வீராங்கனையின் 103 ஆவது பிறந்தநாள்

ஹங்கேரிய ஜிம்னாஸ்டிக்ஸ் ஜாம்பவான் ஆக்னஸ் கெலெட்டி தனது 103 ஆவது பிறந்தநாளை செவ்வாய்க்கிழமை கொண்டாடினார்.

இந்த குறிப்பிடத்தக்க மைல்கல் அவரது நீண்ட ஆயுளைக் கௌரவிப்பதோடு மட்டுமல்லாமல், உலகில் மிகவும் வயதான ஒலிம்பிக் சாம்பியன் என்ற அந்தஸ்தையும் உறுதிப்படுத்துகிறது.

ஜனவரி 9, 1921 இல் ஹங்கேரியின் புடாபெஸ்டில் பிறந்த கெலெட்டியின் பயணம் சாதனைகளின் கதை. அவரது தடகள வீரம் ஐந்து ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களை வெல்ல வழிவகுத்தது.

அவர் 1952 இல் ஹெல்சின்கியில் தங்கத்தை முதன் முதலில் கைப்பற்றினார், அதைத் தொடர்ந்து 1956 இல் மெல்பேர்னில் வியக்க வைக்கும் நான்கு தங்கங்களை வென்றார்.

இச்சாதனை அவரை வரலாற்றில் மிகவும் வெற்றிகரமான ஹங்கேரிய பெண் ஒலிம்பியன் ஆக்கியது மற்றும் அவரது தேசிய பொக்கிஷமாக அந்தஸ்தை உறுதிப்படுத்தியது.

இரண்டாம் உலகப் போரின் கொடூரங்களில் இருந்து தப்பிய அவர், 1957 இல் இஸ்ரேலுக்கு குடிபெயர்ந்த பிறகு, ஜிம்னாஸ்டிக்ஸின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.




அவரது பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக, கெலேட்டிக்கு ஹங்கேரியில் "தேசத்தின் விளையாட்டு வீரர்" என்ற மதிப்புமிக்க பட்டம் மற்றும் சர்வதேச யூத விளையாட்டு அரங்கம் மற்றும் சர்வதேச ஜிம்னாஸ்டிக்ஸ் ஹால் ஆஃப் ஃபேமில் இடம்பிடித்தது உட்பட பல விருதுகள் வழங்கப்பட்டன.

## ஆப்கானிஸ்தான் தொடரில் சாதிக்கப்போகும் ரோஹித் சர்மா




ஆப்கானிஸ்தானுக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட ரி20 கிரிக்கெட் தொடரில் இந்தியா விளையாட உள்ளது. இந்திய அணியின் கப்டனான ரோஹித் சர்மா படைக்க உள்ள சில சாதனைகளைப் பற்றி பார்ப்போம்.

இதுவரை ரி20 கிரிக்கெட்டில் 51 போட்டிகளில் 39 வெற்றிகளை 76.74% என்ற அபாரமான விகிதத்தில் ரோஹித் சர்மா பதிவு செய்துள்ளார்.

அந்த வரிசையில் இத்தொடரில் 3 போட்டிகளிலும் வெற்றியை பதிவு செய்யும் பட்சத்தில் சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் அதிக வெற்றிகளை பதிவு செய்த கப்டன் என்ற டோனியின் உலக சாதனையை ரோஹித் சர்மா சமன் செய்வதற்கு பிரகாச வாய்ப்புள்ளது.

அந்தப் பட்டியல்:

1. எம்.எஸ்.டோனி/பாபர் அசாம்/அஸ்கர் ஆப்கன்/இயன் மோர்கன்/பிரையன் மசாபா: தலா 42
2. ஆரோன் பின்ச் : 40
3. ரோஹித் சர்மா : 39

அத்துடன் இத்தொடரில் 44 ஓட்டங்கள் எடுக்கும் பட்சத்தில் சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய கப்டன் என்ற விராட் கோலியின் வாழ்நாள் சாதனையை உடைத்து ரோஹித் சர்மா புதிய சாதனை உடைப்பதற்கான வாய்ப்புகளும் பிரகாசமாக உள்ளது.

அந்தப் பட்டியல்:

1. விராட் கோலி : 1570
2. ரோஹித் சர்மா : 1527
3. எம்.எஸ். டோனி : 1112
4. சூர்யகுமார் யாதவ் : 300
5. ஹர்திக் பாண்டியா : 295

## பாராலிம்பிக்கில் உஸ்பெகிஸ்தான் வீரர்கள்



உஸ்பெகிஸ்தானின் ஐந்து பாராலிம்பியன்கள் பாராலிம்பிக் விளையாட்டுக்கு தகுதி பெற்றுள்ளனர், அவர்களில் இருவர் முதல் முறையாகும்.

அவர்கள் ஜியோடா இசோகோவா (47 கிலோ), குல் ஜானாய் நைமோவா (65 கிலோ), சுக்ரிடின் டோகி ரோவ் (63 கிலோ), ஜாவோகிர் அலிகுலோவ் (70 கிலோ) மற்றும் அசாத் தோஷ்டெமிரோவ் (80 கிலோ).

நைமோவா தற்போதைய பாராலிம்பிக் சாம்பியனாவார், அதே நேரத்தில் அலிகுலோவ் மற்றும் டோஷ்டெமிரோவ் ஆகியோர் பாரிஸில் பாராலிம்பிக் போட்டியில் அறிமுகமானார்கள்.

டோக்கியோ 2020 பாராலிம்பிக் போட்டிகளில் உஸ்பெகிஸ்தானின் பாராடேக்வாண்டோ அணியை மூன்று தடகள வீரர்கள் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 10.01.2024 அன்று வெளியிடப்பட்டது.